**07/02/2024**

**OS. No. 86/2014**

**பி.வா.சா.2. பூபதி**

**குறுக்கு விசாரணை**

நான் உத்திரமேரூரில் உள்ள மேட்டு தெருவில் நிரந்தரமாக குடியிருக்கிறேன். என்னுடைய தந்தை பெயர் தங்கவேல். தாயார் பெயர் கண்ணம்மாள். நான் 10 வகுப்புவரை படித்துள்ளேன். நான் அரசு போக்குவரத்து கழகத்தில் ஓட்டுநராக வேலை செய்துவருகிறேன். உத்திரமேரூரில் எனக்கு விவசாய நிலங்கள் எதுவும் இல்லை என்றால் சரிதான். 1ம் பிரதிவாதி 2018 ல் இறந்துவிட்டார். என்னுடைய பெற்றோருக்கு நான் சரஸ்வதி, உமாபதி ஆகியோர்கள் வாரீசுகள். என்னுடைய அக்கா உமாபதி இறந்துவிட்டார். அவர் உத்திரமேரூரில் உள்ள சின்னநாரச பேட்டையில் வசித்து வந்து இறந்துவிட்டார். அவர் கணவர் பெயர் ராமச்சந்திரன். மகன் பெயர் வெங்கடேசன். மற்றொரு மகன் திருமலை இறந்துவிட்டார். மற்றொரு மகன் வேலு அவர் உயிருடன் இருக்கிறார். மற்றொரு மகன் விஷ்ணு,

அரசு அவர்கள் உயிருடன் இருக்கிறார்கள். சரஸ்வதி தற்போது நெல்லிமேடு கிராமத்தில் வசித்து வருகிறார். தாவா சொத்தின் மொத்த விஸ்தீரணம் தெரியாது. 2 செண்ட். தாவா சொத்து என்னுடைய தாயார் கண்ணமாளுக்கு பாத்தியப்பட்டது என்பதற்கு பட்டா உள்ளது. அந்த பட்டா பரசுராமன் பெயரிலும் என்னுடைய தாயார் பெயரிலும் கூட்டாக உள்ளது. தனிப்பட்டா இல்லை என்றால் சரிதான். பரசுராமன் வாரீசுகள் 1985 ல் 1 செண்ட்டை கிரையம் கொடுத்தார்கள். அந்த கிரையபத்திரத்தை நான் பார்த்துள்ளேனா என்றால் இல்லை. 1985 திற்கு முன்பும் 1985 ற்கு பின்பும் எனக்கு செட்டில் மெண்ட் எழுதிவைத்த 2013 வரையிலும் பட்டாவானது கண்ணம்மாள் பெயரிலும், பரசுராமன் பெயரிலும் கூட்டாக இருந்தது என்றால் சரிதான். பரசுராமனின் வாரீசுகள் 1985 ல் 1 செண்டை கிரையம் கொடுத்த பிறகு அவர்களுக்கு அந்த சொத்தில் வேறு உரிமை இல்லை என்பது தான்

என்னுடைய வாதம் என்றால் சரிதான். நான் செட்டில்மெண்ட் வாங்கிய பிறகு என் பெயரிலும் பரசுராமன் பெயரிலும் கூட்டாக பட்டா உள்ளது என்றால் சரியல்ல. என் பெயரில் 2 செண்டிற்கு தனி பட்டா உள்ளது. நான் தவறான முறையில் பட்டா வாங்கியுள்ளேன் என்றால் சரியல்ல.

என்னுடைய தாயார் கண்ணம்மாளுக்கும் தாவா சொத்திற்கும் எந்த சம்பந்தமும் இல்லை என்றாலும் என்னுடைய தாயார் தாவா சொத்தை எந்த காலத்திலும் அனுபவித்தது இல்லை என்றாலும் சரியல்ல. தாவா சொத்தில் என்னுடைய தாயாருக்கு எந்த உரிமையும் இல்லை என்றாலும் சரியல்ல. நிலவுடமை மேம்பாட்டு திட்டத்தில் தவறாக பரசுராமன் பெயரில் கூட்டாக பட்டா ஏற்பட்டதாக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. தாவா சொத்து வாதியின் கொள்ளு பாட்டி கண்ணம்மாளுக்கும் அவருடைய மகன் பரசுராமனுக்கும் உரிமையனது என்றாலும் அவருடைய அனுபவத்தில் இருந்தது என்றாலும் சரியல்ல. 1985 ல் பரசுராமனின் வாரீசுகள் ராஜேந்திரனுக்கு 1 செண்டை கிரையம் கொடுத்த விவரம் எனக்கு தெரியும் என்றால் தெரியாது. மீதி 2 செண்டை பரசுராமனின் மனைவி நாகம்மாளும் அவருடைய மகள்களும் அனுபவித்து வந்த விவரம் எனக்கு தெரியும் என்றால் தெரியாது.

பரசுராமனின் மனைவி நாகம்மாள் தாவா சொத்தை அவருடைய பேரனான வாதிக்கு 2014 ல் செட்டில் மெண்ட் எழுதிவைத்த விவரம் எனக்கு தெரியும் என்றால் சரியல்ல. பரசுராமன் எனக்கு மாமா உறவு முறை. 6ம் பிரதிவாதி சங்கீதா எனக்கு தூரத்து உறவு முறை. பரசுராமன் எனக்கு மாமா முறை என்று பொய்யாக சொல்கிறேன் என்றாலும் அவர் எனக்கு உறவினர் இல்லை என்றாலும் சரியல்ல. பரசுராமனின் வாரீசுகளிடம் இருந்து கிரையம் பெற்ற ரஜேந்திரன் இடம் இருந்து சங்கீதா 1 செண்டை கிரையம் பெற்றார் என்றால் சரிதான். தாவா சொத்திற்கு உண்டான பட்டாவில் கண்ணம்மாள் என்பவரின் கணவர் பெயர் இடம் பெறாததை சாதகமாக்கி கொண்டு என்னுடைய தாயார் பெயர் கண்ணம்மாள் என்பதால் நானும் என் தாயாரும் 6 ம் பிரதிவாதியும் கூட்டு சேர்ந்து 2013 ல் ஒரு போலியான செட்டில் மெண்ட் பத்திரம்

எழுதிக்கொண்டோம் என்றால் சரியல்ல. வாதியின் பாட்டி வாதிக்கு செட்டில் மெண்ட் எழுதிக்கொடுத்த விவரம் தெரிந்துக்கொண்டு மறுநாள் நான் தாவா சொத்தை 6 ம் பிரதிவாதியுடன் கூட்டு சேர்ந்து 6 ம் பிரதிவாதிக்கு கிரையம் கொடுத்துள்ளேன் என்றால் சரியல்ல.

தாவா சொத்து என்னுடைய உரிமை மூலம் மற்றும் அனுபவம் இல்லாத காரணத்தினால் தான் நான் வழக்கை நடத்தவில்லை என்றால் சரியல்ல. தாவா சொத்தில் குப்பை கொட்டியும் மாடு கட்டியும் அனுபவித்து வருவதாக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. தாவா சொத்தானது வாதியின் குடும்பத்தாருக்கே சொந்தமானது என்றால் சரியல்ல. தாவா சொத்தில் 6 ம் பிரதிவாதி கடை கட்டவில்லை என்றாலும் அவர் அனுபவிக்கவில்லை என்றாலும் சரியல்ல. என்னுடைய தாயாருக்கும் பரசுராமனுக்கும் மனஸ்தாபம் இல்லை என்றும் அதனால் தனிப்பட்டா பிரிக்கவில்லை என்றும் முதல் விசாரணையில் பொய்யாக சாட்சியம் அளித்துள்ளேன் என்றால் சரியல்ல. 6 ம் பிரதிவாதி சங்கிதாவிற்கு பவ்வியப்பட்டு பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.